# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

# O.S.65/2021

# CNR.No.TNCB19000

Date:04.03.2025 PW1

| பெயர் | குள்ளையன் | வயது | 64 |
|---|---|---|---|
| த/பெ | பத்திரப்ப கவுண்டர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | ராமேகவுண்டன்புதூர் | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | தொழில் | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 04rd March 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

**1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 9-ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். 2, 3 பிரதிவாதிகள் என்னுடைய மகன் மற்றும் மகள் ஆவார்கள். நான் தாக்கல் செய்துள்ள வா.சா. ஆ. 2 ஆவணம் மருத்துவ ஆவணங்கள் என்றால் சரிதான். செவிதிறன் குறித்து மருத்துவரிடம் தனியாக சான்று பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் 2010 ம் ஆண்டிலிருந்து காது கேட்காததால் மருத்துவரிடம் சிகிச்சை பெற்று அதற்கான மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. செவிதிறன் குறித்து தனியாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு எவ்வளவு சதவீதம் செவிதிறன் கேட்காது என்றும் எந்த காது கேட்கவில்லை என்று பிராதிலும் முதல் விசாரணை யிலும் சொல்லவில்லை என்றால் பொதுவாக காது கேட்காது என்று சொல்லியிருக்கிறேன்.

2-ம் பிரதிவாதி என்ன படித்துள்ளார் என்றால் டிப்ளமோ படித்திருக்கிறார். 3-ம் பிரதிவாதி எம்.காம் படித்திருக்கிறார். என்னுடைய மகள் தற்போது எங்கு குடியிருக்கிறார் என்றால் ஒசூரில் குடியிருக்கிறார். அவருக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 4 வருடத்திற்கு முன்பு திருமணம் ஆனது. 2ம் பிரதிவாதி ஆட்டுப்பண்ணை வைப்பதற்காக வங்கியில் கடன் பெறுவதற்காக சில ஆவணங்களில் என்னிடம் கையெழுத்து கேட்டார் என்று பிராதிலும் முதல்

விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லியிருக்கிறேன் அது எந்த வங்கியில் கடன் பெறுவதற்காக கேட்டார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.